1. கர்த்தரின் காருண்யமே

பல்லவி

கர்த்தரின் காருண்யமே
என்னை பெரியவனாக்கியதே
கருத்தோடு பாடிடுவேன்
கனிவோடு தேடிடுவேன்

அனுபல்லவி

*நானானா நானன்னா நானா நானன்னா - 2*

சரணங்கள்

1. கர்த்தருக்கு காத்திருந்து
புதுபெலன் பெற்றிடுவோம்
கழுகை போல் செட்டை அடித்து
உயர உயர பறந்திடுவோம்
- நானானா நானா

2. வெண்கல கதவுகள் திறந்திடுவீர்
இரும்பு தாழ்ப்பாள்களை முறித்திடுவீர்
அந்தகாரத்தின் பொக்கிஷங்களை
எனக்கு திறந்து தந்திடுவீர்
- நானானா நானா

3. இருளானது பூமியையும்
காரிருள் ஜனங்களை மூடிவிடும்
என் மேல் கர்த்தர் உதித்திடுவீர்
தேவ மகிமையால் வாழ்ந்திவேன்
- நானானா நானா

4. எந்தன் வெளிச்சத்தில் ஜாதிகளும்
உதிக்கிற ஒளியில் ராஜாக்களும்
தேடி நடந்து வருவார்கள்
கர்த்தருக்குள் களிகூறுவேன்
- நானானா நானா